**கவனிக்க.-** *2016.12.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ), பகுதி III மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2001 - 2017 ජනවාරි මස 06 වැනි සිකුරාදා - 2017.01.06

*2001 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 4 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 7 |

**கவனிக்க.-** தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தம்) சட்டமூலம் 2016, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி.வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2017, சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, சனவரி மாதம் 13 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை நிரந்தரக் கடற்படை

### முக்குளிப்போருக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தரக் கடற்படையில் முக்குளிப்போருக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

2. பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண் பரீட்சார்த்திகளைப் படையில் சேர்த்துக்கொள்வதற்காக இலங்கைக் கடற்படையினால் நேர்முகத் தேர்வு நடாத்தப்படும்.

இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் தாய்மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கான விருப்பத் தெரிவுப் பாடங்கள் எவையும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

3. **ஏனைய தேவைப்பாடுகள்**.- இலங்கை நிரந்தரக் கடற்படையில் இணைத்துக்கொள்ளப்படுவதற்காகப் பின்வரும் பொது நிபந்தனைகளைப் பரீட்சார்த்திகள் பூர்த்திசெய்தல் வேண்டும் :-

(அ) *தேசியம்*.- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) *வயது*.- ஆட்சேர்ப்புத் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 24 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(இ) *உயரம்*.- 158 செ. மீ. இற்குக் குறையாத உயரம் ;

(ஈ) *நிறை*.- 47 கி. கி. இற்குக் குறையாத நிறை ;

(உ) *நிறப்பார்வை*.- STD II

(ஊ) *கட்புலக் கூர்மை*.- இடது கண் 6/ 6 மற்றும் வலது கண் 6/ 6 (மூக்குக் கண்ணாடி மற்றும் லென்ஸ் இன்றி) ;

(எ) *திருமண நிலை*.- விண்ணப்பதாரர்கள் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். பயிற்சியின்போதும், தரத்திற்குரிய தகைமையினைப் பெறும் வரையும் திருமணம் செய்தல் அனுமதிக்கப்பட மாட்டாது.

4. விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்த சாதனைகளுக்கு உரிய கவனம் செலுத்தப்படும்.

5. 2 ஆம் மற்றும் 3 ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகத் தேர்விற்கு வரும்போது உயரம், பார்வை மற்றும் நிறை ஆகியன அளவிடப்படும். வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தர நியமத்திற்குக் கீழ் உயரம், பார்வை மற்றும் நிறை என்பவற்றைக் கொண்ட விண்ணப்பதாரிகளும், விதிவிலக்கான திறன்களைக் கொண்டிராத விண்ணப்பதாரிகளும் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். விசேட திறமையினைக் கொண்டிருக்கக்கூடிய அல்லது சேவைக்கான தகுதியினைக் கொண்டிருக்கக்கூடிய எவரேனும் பரீட்சார்த்தி, வழங்கப்பட்ட போதிய உயரத்தினைக் கொண்டிராவிடினும் போதிய கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருப்பாராயின் அவர் இலங்கைக் கடற்படைத் தளபதியின் தற்றுணிவின் பேரில் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

6. **சேவை நிபந்தனைகள்** :

(அ) பரீட்சார்த்திகள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களாகப் படையில் இணைத்துக்கொள்ளப்படுவதுடன் அடிப்படைப் பயிற்சிக் கற்கைநெறியினையும் தொடர வேண்டும்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் கலந்தாலோசனையுடன் கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள இடமொன்றில் பயிற்சியினைத் தொடர்வதற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்கள் தயாராக இருத்தல் வேண்டும்.

(இ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவராக பயிற்சிக் காலப்பகுதியிலும், அதன் பின்னரும் ஆளணியினர் கடற்படைச் சட்டத்திற்கு உட்படுவர்.

(ஈ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒவ்வொருவருக்கும் சீருடைகள், உபகரணங்கள் மற்றும் மருத்துவ வசதிகள் அனைத்தும் வழங்கப்படும்.

(உ) பயிற்சிக் காலத்தின்போது, ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டவர்களுக்கு பொது உணவகத்தில் தங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும்.

(ஊ) பயிற்சியின்போது ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட ஒருவர் சுய விருப்பில் தனது பரீட்சார்த்தி தன்மையினை முடிவுறுத்தினால், அதுவரை காலமும் இலங்கைக் குடியரசால் வழங்கப்பட்ட அனைத்துச் செலவினங்களையும் இலங்கைக் குடியரசுக்கு அவர் மீளச்செலுத்த வேண்டும்.

(எ) திருமணமான மாலுமிகளுக்கு விடுதி இருப்பின் வழங்கப்படலாம். அரச பணியாளர்களுக்கு ஏற்புடையதைப் போன்றதான வாடகை விதிக்கப்படும்.

(ஏ) அனைத்து மாலுமிகளும் எந்தவொரு நேரத்திலும், உலகின் எந்தவொரு பாகத்திலும் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக நியமிக்கப்படுவதற்கு உள்ளாகுவர்.

(ஐ) அனைத்து மாலுமிகளும் கடற்படைச் சட்டத்தினால் நிர்வகிக்கப்படுவர்.

7. **அரச கரும மொழித் தேவைப்பாடுகள்**.- தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் இலங்கைக் குடியரசின்

மொழிக் கொள்கைக்குப் பயனளிக்கும் வகையிலும், குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்ட ஏற்பாடுகளின் அமுலாக்கத்திற்காகவும், ஏற்கனவே ஆக்கப்பட்ட அல்லது இதன் பின்னர் ஆக்கப்படக்கூடிய ஏதேனும் விதிகளுக்கு இணங்கி ஒழுகுவதற்குத் தேவைப்படுத்தப்படுவார்கள்.

8. **கொடுப்பனவுகள் மற்றும் படிகள் :**

(அ) ஆரம்பச் சம்பளம்.- 17,332 ரூபா

(ஆ) வாழ்க்கைச் செலவு.- 7,800 ரூபா

(இ) சீருடை சுத்தப்படுத்தலுக்கான படிகள்.- 170 ரூபா

(ஈ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாட்டுப் பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(உ) கஷ்டப் பிரதேசங்களுக்கான படிகள் (செயற்பாடற்ற பகுதிகள்) - அடிப்படைப் பயிற்சியின் பின்னர்

(ஊ) ஏனைய படிகள்/ விசேட மேலதிக படிகள்.- விசேட படிகள் 1,000 ரூபா

(எ) சீராக்கற் படிகள்.- 2,400 ரூபா

அண்ணளவான மொத்தம்.- 38,542 ரூபா

(ஏ) வருடம் ஒன்றிற்கு விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு 3 தொகுதிகள் (மாலுமி, வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்காக).

(ஐ) மாதம் ஒரு முறை கடற்படைத் தளத்திலிருந்து சொந்த இடங்களுக்குப் பிரயாணம் செய்ய உணவகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் மாலுமிகளுக்கு புகையிரத தொகுதிச் சீட்டுகளின் மேலதிக தொகுதி ஒன்று அல்லது பேருந்து செலவினை மீளச் செலுத்துதல்.

(ஒ) சீருடை மற்றும் துணைப் பொருட்களின் இலவச விநியோகம்.

(ஓ) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடையவிடத்து, குடும்பங்கள் உட்பட).

(ஔ) அரசாங்க விடுதி ஒன்றில் வசிக்காத திருமணமான மாலுமிகளுக்கு மாதாந்தம் 1,600 ரூபாவிலிருந்து 4,250 ரூபா வரையான வாடகைப் படிகள்.

9. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள் :**

(அ) மாதிரிப்படிவத்தின்படி விண்ணப்பத்தில் ஒவ்வொரு பகுதிக்கும் வேண்டிய விபரங்கள் கையெழுத்தினால் பூரணப்படுத்தப்பட வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களைக் கொண்ட பரீட்சார்த்திகள் பின்வரும் ஆட்சேர்ப்பு நிலையங்களுள் ஒன்றிற்கு காலை 8 மணியிலிருந்து அழைக்கப்படுவர். (போயா மற்றும் ஏனைய பொது விடுமுறைகள் தவிர்ந்த தினங்கள்). மேலதிக தகவலுக்கு 011-2215162 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொள்ளவும் அல்லது www.navy.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும் :

* வெலிசறை - மஹசென் கடற்படைத் தளம்
* காலி - தக்ஷின கடற்படைத் தளம்
* பூனேவ - பந்துகாபயன் கடற்படைத் தளம்

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்போது அல்லது அவ்வாறு வேண்டப்படும்போது பரீட்சார்த்திகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவார்கள் :-

(1) பிறப்பு பதிவுச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த கிளைக்காகத் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள் ;

(3) பாடசாலை விடுகைப்பத்திரம் ;

(4) கிராம அலுவலரின் சான்றிதழ் (முடிவுத் திகதியிலிருந்து 6 மாத காலத்தினுள் எடுக்கப்பட்டது) ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வியாபார/ தொழில்நுட்பப் பயிற்சி மற்றும்/ அல்லது அனுபவம் (ஏதாவது) ;

(6) அண்மைய இரு நற்சான்றிதழ்கள் அவற்றில் ஒன்று கடைசியாக சமுகமளித்த பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு மற்றைய சான்றிதழ் இரண்டு வருடத்திற்கு மேல் விண்ணப்பதாரியை நன்கு அறிந்த பொறுப்புவாய்ந்த நபர் ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில் தருநரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் ;

(7) விளையாட்டுச் செயற்பாடுகள், படைப் பயிற்சி ஆகியவை தொடர்பான சான்றிதழ்கள்.

(இ) மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் கோரும்போது சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

10. தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னரோ அல்லது தெரிவின் பின்னரோ விண்ணபத்தில் குறிப்பிடப்பட்ட கூற்றுக்களில் ஏதேனும் கூற்று பிழையாக இருப்பின் அது விண்ணப்பதாரியைத் தகுதியற்றவராக்கும்.

11. **நேர்முகப் பரீட்சைத் தெரிவுகள் :**

(அ) மேலே குறிப்பிட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகள் இலங்கைக் கடற்படையினால் நடாத்தப்படுகின்ற அடிப்படை மருத்துவப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இந்த அடிப்படையில் மருத்துவப் பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்திகள் முக்குளித்தல் மருத்துவப் பரீட்சை மற்றும் மீள் அழுத்த அறைச் சோதனை ஆகியவற்றிலும் சித்தியடைதல் வேண்டும். பௌதிக வினைத்திறன் பரீட்சை மற்றும் ஏனைய பரீட்சைகள் என்பவற்றில் தகுதி பெறுகின்ற பரீட்சார்த்திகள் மேலும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவராவர்.

(ஆ) மேற்படி பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்ப தாரிகளுக்கு பிரயாணச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பதாரி ஒருவர் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் அவர் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டையினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைகளுக்குத் தகுதியான பரீட்சார்த்திகள் இலங்கைக் கடற்படை மருத்துவச் சபை ஒன்றின் முன்னால் தோற்றுவதற்கு தேவைப் படுத்தப்படுவார்கள்.

(உ) பரீட்சார்த்தி ஒருவரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரேனும் ஒருவர் நற்சான்றிதழ் ஒன்றை வழங்குவதன் மூலமே சிபாரிசு செய்ய வேண்டும். ஒருவரைத் தெரிவுசெய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஆதரவு மற்றும் முயற்சி அத்தகைய பரீட்சார்த்தியைத் தகுதியற்றவராக்கும்.

(ஊ) பட்டியலில் சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமற்றவ ராகக் காணப்படுகின்ற பரீட்சார்த்திகள் தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது.

**குறிப்பு**.- இந்த வர்த்தமானி அறிவித்தலானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப் பட்டிருக்கின்றன. இவ்வர்த்தமானி அறிவித்தல் பற்றிய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழி உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஆர்சி விஜேகுணரத்ன,
WV, RWP*, RSP, VSV, USP, ndc, psn,
வைஸ் அட்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கடற்படையில் முக்குளிப்போர் பதவி**

1. தேசியம் :----.

(பரம்பரை மூலம் அல்லது பதிவின் மூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுவதோடு பதிவுமூலம் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்).

2. முழுப்பெயர் :----.

(தேசிய ஆள் அடையாள அட்டையில் குறிப்பிட் டுள்ளவாறு)

3. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

4. நிரந்தர முகவரி :----.

5. தபால் முகவரி :----.

6. பிறந்த திகதி :----.

7. வயது :

வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.
(நேர்முகப் பரீட்சைத் திகதியன்று)

8. உயரம் : ---- (செ. மீ.)
மார்பு : ---- (செ. மீ.)
நிறை : ---- (கி. கி.)

9. நிரந்தர முகவரிக்கு அண்மைய பொலிஸ் நிலையம் :----.

10. மாவட்டம் :----.

11. தேர்தல் தொகுதி :----.

12. கிராம அலுவலர் பிரிவு :----.

13. தொலைபேசி இலக்கம் :----.

14. திருமணமானவரா ? :----.

15. பால் :----.

16. சமூகமளித்த பாடசாலைகள் :----.

17. பெற்றுக்கொண்ட பாடசாலைத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :

| பாடசாலையின் பெயர் | பரீட்சையின் வகை | பரீட்சை ஆண்டு | சித்தி அடைந்த பாடம் (தரம் உள்ளடங் கலாக) |
|---|---|---|---|
| | க. பொ. த. (சா. த.) :<br>க. பொ. த. (உ. த.) :<br>வேறு : | | |

18. பாடசாலையை விட்டுச்சென்ற பின்னர் தொழில் பற்றிய விபரங்கள் (ஏற்புடையதாயின்) :

| தொழில் தருநரின் பெயர் மற்றும் முகவரி | தொழிலின் தன்மை | சேவைக்காலம் | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

19. பெற்றோர் பற்றிய விபரங்கள் :

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

20. இப்பதவிக்கான ஏதேனும் விசேட தகைமை :----.

21. விளையாட்டுக்களில் தற்போதைய சாதனைகள் பற்றிய விபரங்கள் :

(குறிப்பிட்ட திகதிகள் மற்றும் ஆண்டுகளுள் பங்கு பற்றிய குழுக்கள் மற்றும் போட்டிகள் பற்றியும் பெற்றுக்கொண்ட தரங்கள்/ மட்டங்கள் என்பவை பற்றிய விபரங்களைக் குறிப்பிடவும்) :----.

22. பாடசாலையில்/பல்கலைக்கழகத்தில் அல்லது வெளி நிறுவனங்களுடன் ஏனைய குறிப்பு சாதனைகள் (திகதி கள்/ வருடங்களுடன் விபரங்களைக் குறிப்பிடவும்.) : ----.

23. ஆயுதப்படை அல்லது தொண்டர் படையில், பயிலிளவல் பயிற்சிப் படையில் அல்லது இளைஞர் சாரணர் அமைப்பு என்பவற்றில் ஏதேனும் முன்னரான சேவை :----.

24. இலங்கைக் கடற்படை அல்லது ஏதேனும் ஆயுதப்படை அல்லது பொலிஸ் ஆகியவற்றில் இணைந்து கொள்வதற்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களையும் முடிவுகளையும் தரவும் :----.

25. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றமொன்றில் குற்றம் சாட்டப்பட்டு அல்லது கைது செய்யப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடுக :----.

26. அரசாங்கத் திணைக்களமொன்றில் அல்லது அரச துறை/ சபை/ கூட்டுத்தாபனம் (அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்ற மத்திய வங்கி, தேசிய வங்கி, பல்கலைக்கழகங்கள், கூட்டுக் களஞ்சியக் கம்பனிகள் என்பவற்றில் ஏற்கனவே சேவையில் ஈடுபட்டிருந்தால் அத்தொழிலை முடிவுறுத்திய மைக்கான காரணங்கள்) :----.

27. நடத்தைச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

| பெயர் | பதவி | தபால் முகவரி |
|---|---|---|
| | | |

28. விண்ணப்பதாரியினால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம் :

மேற்படி வினாக்களுக்குக் கொடுக்கப்பட்ட விடைகள் என் அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவையும் சரியானவையும் எனவும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்த மானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கையில் சுழியோடிக் கிளைக்காக தெரிவுசெய்யப்படுகின்ற இத்தகைய பரீட்சார்த்திகள் தொடர்பாக ஏற்புடைய தாகும் விதிகளையும் பின்பற்றப்படும் நடவடிக்கை முறைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் என்றும் ஒழுக்கக் கடப்பாட்டுடன் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

1-144

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### போக்குவரத்து அலுவலர் (தரம் III) பதவிக்கு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

மதுவரித் திணைக்களத்தின் போக்குவரத்து அலுவலர் பதவி (பதவி எண்ணிக்கை 1) மற்றும் தொழில்நுட்ப அலுவலர் பதவி (பதவி எண்ணிக்கை 1) பொருட்டு இலங்கைப் பிரசைகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி. மீ. X 210 மி. மீ. (ஏ4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2017.01.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக ''மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித் திணைக்களம், இல. 34, டபிள்யூ. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02'' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் ''போக்குவரத்து அலுவலர்/தொழில்நுட்ப அலுவலர் பதவிக்கான விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லா விதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்படமாட்டாது. விண்ணப்பப் படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

1. **பதவியின் பொதுவான கடமை விபரம் :**

1.1 ***போக்குவரத்து அலுவலர்.***- திணைக்களத்தின் வாகனங்களை திருப்திகரமான மட்டத்தில் பேணுதலும் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாக குறித்தொதுக்கப்படு கின்ற ஏனைய மேற்பார்வைப் பணிகளும்.

*1.2* ***தொழில்நுட்ப அலுவலர்.-*** *திணைக்களத்தின் சகல நிருமாண வேலைகள் தொடர்பான நடவடிக்கை களின்போது வேலைகளைத் திட்டமிடுதல், விலை மதிப்பீடுகளைத் தயாரித்தல், வெளிக்களத்தில் இருந்துகொண்டு வேலைகளை மேற்பார்வை செய்வதன் மூலம் குறித்த பணிகள் உரிய நியமத்துக்கு அமைவாக இடம்பெறுகின்றனவா என பரிசோதித்துப் பார்த்தல், அது தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல், பதிவுகளைப் பேணுதல் அத்துடன் இந்தப் பதவிக்கு ஏற்புடையதாக குறித்தொதுக்கப்படுகின்ற ஏனைய மேற்பார்வைப் பணிகள்.*

*2.* ***சம்பள அளவுத்திட்டம்.-*** *மாதாந்தம் ரூ. 15,005-4x180-6x240-11x320-20x360-ரூ. 27,885 சம்பளம் உரித்துடையதாகும். (பொ. நி. சு. 6/ 2006* iv *இன்படி* (MN-3-2006-A)

*(வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகள் இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரமாணக் குறிப்புக்கு இணங்கவாகும்.)*

*3.* ***வயதெல்லை.-*** *விண்ணப்பதாரர்கள் 2017.01.31 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.*

*4.* ***கல்வி மற்றும் பிற தகைமைகள் :***

*4.1* ***போக்குவரத்து அலுவலர் (தரம் III) :***

*(அ) கல்வித் தகைமைகள்.- மூன்று (3) விஞ்ஞான பாடங்கள் அடங்கலாக கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும் ;*

*அத்துடன்*

*தமிழ்/ சிங்களம்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மற்றுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தி அடங்கலாக ஒரே அமர்வில் ஆறு (6) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.*

*(ஆ) தொழில்சார் தகைமைகள் :*

(i) *தேசிய பயிலுநர் பயிற்சி அதிகாரசபையின் ஒருகொடவத்தை பயிற்சி நிலையத்தில் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறி யியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கைநெறி யொன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

(ii) *ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியில் மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறி யியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கை நெறியொன்றைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல் ;*

*அல்லது*

(iii) *அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவன மொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மோட்டார் பொறிமுறை விஞ்ஞானம் அல்லது மோட்டார் வாகன பொறி யியல் விஞ்ஞானம் தொடர்பில் 3 வருடங்களுக்குக் குறையாத கற்கைநெறி யொன்றைப் பயின்று அதனை வெற்றிகர மாகப் பூர்த்திசெய்திருத்தல் ;*

*அத்துடன்*

(iv) *எல்லா வகை மோட்டார் கார் மற்றும் லொறி ஓட்டுதல் தொடர்பில் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான தேர்ச்சிச் சான் றிதழ் மற்றும் மோட்டார் வாகனங் களைத் திருத்தும் ''ஏ'' வகுப்பு வேலைத்தளமொன்றுக்கு பொறுப்பாக செயலாற்றியுள்ளமை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றி லிருந்து சான்றிதழ் ஒன்றைப் பெற்றி ருத்தல் ;*

*அத்துடன்*

(v) *தொழிலாளர்களை ஒழுங்குசெய்யும் கட்டுப்படுத்தும் திறன், மோட்டார் வாகன தொகுதியைக் கொண்ட வாகன தரிப்பிடமொன்றைப் பராமரித்தல், போக்குவரத்து தொகுதியிலுள்ள ஊழியர்களைக் கட்டுப்படுத்தும் திறன் போன்றன இருத்தல் ;*

*அத்துடன்*

(vi) *பெற்றோல் மற்றும் டீசல் உள் எரிதல்* (Internal Combustion) *பெற்றோல் மற்றும் டீசல் என்ஜின் திருத்தும், பராமரிக்கும் அறிவு இருத்தல்.*

*4.2* ***தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) :***

*(அ) கல்வித் தகைமைகள்.- தூய கணிதம்/ பிரயோக கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் அடங்கலாக*

மூன்று (3) விஞ்ஞான பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பொது சாதாரணப் பரீட்சை தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மற்றுமொரு பாடத்துக்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) ***தொழில்சார் தகைமைகள் :***

(i) மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவகத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியல் விஞ்ஞான தேசிய டிப்ளோமா ;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா ;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் I ஆம் பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vi) வேலை வாய்ப்புத் துறைக்கு ஏற்புடையதாக தேசிய தொழில் தேர்ச்சி (NVQ) 6 மட்டத்திலான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;

அல்லது

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் வழங்குகின்ற நிறுவனங்களிடமிருந்து விசாரித்து கருத்துக்கள் பெறப்பட்டதன் பிற்பாடு மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லாவிதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பிற தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

(இ) ***அனுபவம்.***- உரிய துறையில் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம் மேலதிக தகைமையொன்றாகக் கருதப்படும்.

(ஈ) ***உடல் ரீதியான தகைமைகள்.***- (i) நாட்டின் எந்தவொரு பிரதேசத்தில் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் ரீதியான, உளரீதியான தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) ***ஏனைய தகைமைகள் :***

(i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(iii) 2017.01.31 ஆந் திகதியன்று மேலே 3 மற்றும் 4 இல் தரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் எல்லாவிதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

5. **சேவைக்கு ஆட்சேர்க்கும் முறை**.- எழுத்துப் போட்டிப் பரீட்சையினதும், பொதுவான நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் தேர்ச்சி ஒழுங்கின்படி ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

***எழுத்துப் பரீட்சை பற்றிய விபரங்கள்.***- நுண்ணறிவு (நேரம் : 1 1/ 2 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்.

விடயத்துக்கேற்ற தொழில்நுட்பப் பரீட்சை (நேரம் : 3 மணித்தியாலங்கள்) - (100 புள்ளிகள்)

விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்தின்படி ஒரு மொழியில் மாத்திரமே இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

***பாடத்திட்டம் :***

*போக்குவரத்து அலுவலர் (தரம் III) :*

***நுண்ணறிவு வினாத்தாள்.*-** விஞ்ஞான ரீதியான, எண்சார்ந்த மற்றும் உருவங்கள் ரீதியாக முன்வைக்கப் படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரர்களின் முடிவுகள் மற்றும் பிரதிச் செயற்பாடுகளைப் பரிசீலனை செய்வதன் மூலம் விண்ணப்பதாரர்களின் புரிந்துணர்வு சக்தியையும் புத்திசாலித்தனத்தையும் கணித்தல் இத்தால் எதிபார்க்கப்படுகிறது.

***தொழில்நுட்ப வினாத்தாள்.*-** மோட்டார் வாகன இயந்திர நுட்பம் மற்றும் நெடுஞ்சாலைச் சட்டங்கள் பற்றிய அறிவு இவ்வினாத்தாளிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

*தொழில்நுட்ப அலுவலர் (தரம் III) :*

***நுண்ணறிவு வினாத்தாள்.*-** விண்ணப்பதாரரின் தர்க்க ரீதியாக சிந்திக்கும் தர்க்க ரீதியாக பகுப்பாய்வு செய்யும் தன்மையையும் தீர்மானிக்கும் ஆற்றலையும் பரிசீலிக்குமுகமாக வினாக்களைக் கொண்டுள்ளது.

***தொழில்நுட்ப வினாத்தாள்.*-** கட்டிட நிர்மாணம், வர்ணம் பூசுதல், மர வகைப்படுத்தல், மரங்களை தோய்த்தல், தரப்பட்ட வெளியுருவ அமைப்பின்படி வேலைக்கான திட்டங்களைத் தயாரித்தல், கணியப்பட்டியல்களுக்கு அமைவாக பட்டியல்களைத் தயாரித்தல் அத்துடன் அடிப்படை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு பற்றிய அறிவு.

6. **பரீட்சைக் கட்டணம்.**- விண்ணப்பதாரர்கள் 500 ரூபா பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையில் 0007041628 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக் கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட வங்கி பற்றுச்சீட்டை விண்ணபத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கிப் பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை விண்ணப்பதாரர் தம்வசம் வைத்துக் கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்படமாட்டாது.

7. **தகுதிகாண் காலம்.**- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரிகள் மூன்று (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப் பட்டு அக்கால முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப்படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்தால் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

8. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.**-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும் ;
(ii) நாட்டின் எப்பிரதேசத்திலேனும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட முடியும் ;

9. **சேவை நிபந்தனைகள்.**- (அ) அரச கரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் அமுல்படுத்தப்படுகின்ற சகல ஒழுங்குவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(இ) அரசாங்க சேவை ஆணைக்குழு நடவடிக்கை முறை விதிகளில் காட்டப்பட்டுள்ள பொது நிபந்தனைகளுக்கு மேலதிகமாக இலங்கை தொழில்நுட்பச் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளும் நிபந்தனைகளும் ஏற்புடையனவாகும்.

எல். கே. ஜீ. குணவர்தன,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்,
2016, திசெம்பர் 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மதுவரித் திணைக்களத்தின் போக்குவரத்து அலுவலர்/ தொழில்நுட்ப அலுவலர் பதவி**

1. (i) முழுப்பெயர் (தாய் மொழியில்) :----.
   (ii) முழுப்பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (i) நிரந்தர வதிவிட முகவரி :----.
   (ii) பிரதேச செயலாளர் பிரிவு :----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iv) அஞ்சல் முகவரி :----.
   (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
   (v) தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :----.

2017.01.31 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :------ மாதங்கள் :------ நாட்கள் :------

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.
5. தேசிய இனம் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
7. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது பற்றி : ----.

8. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்திகள் :
வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(மேற்படி சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்திகள் :
வருடம் :----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

(மேற்படி சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(iii) தொழில்சார் தகைமைகள் :

| கற்கைநெறியின் பெயர் | கற்கை நெறியை பின்பற்றிய காலம் இருந்து- வரை | கற்கைநெறியின் வருட எண்ணிக்கை | நிறுவனம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(மேற்படி சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

(iv) அனுபவம்.- பாடசாலையிலிருந்து விலகியபின் செய்த தொழில்/ பின்பற்றிய பயிற்சிநெறிகள் :

| தொழில் அல்லது பயற்சி நெறியின் பெயர் | காலம் இருந்து-வரை | நிறுவனம் | தொழில் எனின் விலகிய மைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(மேற்படி சேவைச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

9. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
பற்றுச்சீட்டு இலக்கம் :----.

| பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

10. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்புக்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

01-133

---

## திருத்தம்

## கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு

### இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016/ 17

2016.10.21 ஆந் திகதிய 1990 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம், இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2016/ 17 தொடர்பான அறிவித்தலுக்கு அமைய பந்தி 2 இன்படியான விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2017.01.16 ஆகும்.

டி. கே. ஆர். ஏக்கநாயக்க,
செயலாளர்.

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு,
2016.12.

1-38

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

*அட்டவணை - 2017*

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 06.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2016 |
| | | வெள்ளி | 13.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2016 |
| | | வெள்ளி | 20.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2017 |
| | | வெள்ளி | 27.01.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2017 |
| **பெப்புருவரி** | .. | வெள்ளி | 03.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.01.2017 |
| | | வியாழன் | 09.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.01.2017 |
| | | வெள்ளி | 17.02.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.02.2017 |
| | | வியாழன் | 23.02.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 09.02.2017 |
| **மாச்சு** | .. | வெள்ளி | 03.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.02.2017 |
| | | வெள்ளி | 10.03.2017 | .. | நண்பகல் 12 | வியாழன் | 23.02.2017 |
| | | வெள்ளி | 17.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.03.2017 |
| | | வெள்ளி | 24.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.03.2017 |
| | | வெள்ளி | 31.03.2017 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.03.2017 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.